# தமிழ்ஒளி அறக்கட்டளை

# தமிழ்ஒளி நூற்றாண்டு – பள்ளி மாணவர்களுக்கு தமிழ் சார்ந்த போட்டிகள்

நாள்: 27.07.2024 இடம்: கடலூர் மாவட்டம்

ஆ.மொ.4 /9089/ 2023

<u>பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி பொதுவிதிமுறைகள்</u>

<u>போட்டிகள் – பரிசுத்தொகை விவரம்:</u>

| வ. எண் | பரிசு விவரம் | 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை (கவிஞர் தமிழ்ஒளி கவிதை ஒப்பித்தல்) | 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு பாவேந்தர் பாரதிதாசன் பேச்சுப் போட்டி | 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு பாவேந்தர் பாரதிதாசன் கவிதைப் போட்டி (எழுதுதல்) 2 பக்கங்கள் | மொத்தம் ரூபாய் |
|---|---|---|---|---|---|
| 1. | முதல் பரிசு | 15,000/– | 15,000/– | 15,000/– | 45,000/– |
| | | பரிசுத்தொகை ரூ.10,000/– மற்றும் கேடயம் ரூ.5,000/– | | | |
| 2. | இரண்டாம் பரிசு | 10,000/– | 10,000/– | 10,000/– | 30,000/– |
| | | பரிசுத்தொகை ரூ.7,000/– மற்றும் கேடயம் ரூ.3,000/– | | | |
| 3. | மூன்றாம் பரிசு | 7,000/– | 7,000/– | 7,000/– | 21,000/– |
| | | பரிசுத்தொகை ரூ.5,000/– மற்றும் கேடயம் ரூ.2,000/– | | | |
| | மொத்தம் | 32,000/– | 32,000/– | 32,000/– | 96,000/– |

1. போட்டியில் கடலூர் மாவட்டத்திலுள்ள பள்ளி மாணவர்கள் மட்டுமே பங்கேற்க இயலும்.
2. போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் போட்டி நாளன்று முற்பகல் 08.30 மணிக்குள் தங்கள் வருகையைப் பதிவு செய்திடல் வேண்டும்.
3. போட்டியில் பங்கேற்கும் மாணவ/மாணவியர் பள்ளி ஆசிரியர் அல்லது பெற்றோருடன் மட்டுமே போட்டிக்கு வரவேண்டும் தனியாக மாணவ/மாணவிகளை அனுப்புதல் கூடாது. மாணவ/மாணவிகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல் வேண்டும்.
4. பள்ளி மாணவ/மாணவியர் சீருடையில் வந்தால் மட்டுமே போட்டியில் பங்கேற்க இயலும்.
5. போட்டியில் பேசுவதற்கு ஒருவருக்கு 3 நிமிடங்கள் மட்டுமே அளிக்கப்படும்.
6. வெற்றி பெற்றவர்களைத் தெரிவு செய்வதில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
7. போட்டிக்கான தலைப்புகள் அனைவருக்கும் தெரியும் வகையில் வெளியிடப்பட்டது.

8. தமிழ்ஒளி அறக்கட்டளை போட்டி தொடர்பான விவரங்கள், தலைப்புகள் மற்றும் போட்டிக்கான தமிழ்ஒளியின் கவிதைத் தொகுப்பு இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இணைய முகவரி tamiloli.in.
9. தமிழ்ஒளி கவிதை ஒப்புவித்தல் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவியர் tamiloli.in இணையத்தில் வெளியிடப்பட்டுள்ள கவிதைகளை பதிவிறக்கம் செய்து தாங்கள் விரும்பியவாறு கவிதையினை மனப்பாடம் செய்து போட்டியில் ஒப்புவித்தல் வேண்டும். அக்கவிதைகளை குறைந்தது 3 நிமிடங்கள் ஒப்புவித்தல் வேண்டும். குறைந்தது 25 வரிகள் உள்ள கவிதை ஒப்புவித்தல் வேண்டும்.
10. பாவேந்தர் பாரதிதாசன் கவிதை எழுதுதல் போட்டி மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் பேச்சுப்போட்டிகளுக்குரிய தலைப்புகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டமையால் குலுக்கல் முறையில் மாணவர்களால் தெரிவு செய்யப்பெறும் தலைப்பில் மட்டுமே பேச அனுமதிக்கப்பெறுவர். எனவே போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் அறிவிக்கப்பட்ட தலைப்புகள் அனைத்திலும் பேச ஆயத்தமாக வரவேண்டும்.
11. மொழி, நடை, வெளிப்பாடு என்ற அடிப்படையில் மாணவர்கள் பரிசுக்குத் தெரிவு செய்யப்பெறுவர்.
12. இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவியர் பங்கேற்புப் படிவத்தை நிறைவு செய்து பள்ளி தலைமையாசிரியர் பரிந்துரையுடன் போட்டி தொடங்கும் முன்பு கடலூர் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் அளிக்க வேண்டும். பங்கேற்புப் படிவம் இல்லாத மாணவர்கள் போட்டியில் கலந்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
13. இப்போட்டிகள் 2 சுற்றுகளாக நடைபெறும். முதல் சுற்றில் தெரிவு செய்யப்பெறும் மாணவ / மாணவியர் இறுதி சுற்றில் கலந்து கொள்வர். முதல், இரண்டு, மூன்று இடங்களுக்கு மட்டுமே பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறும்.
14. போட்டியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பெறும்.
15. 09.30 மணிக்கு மேல் வருகை தரும் மாணவ / மாணவியர் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
16. போட்டி உரிய நாளில் நடத்தப் பெற்று அன்று பிற்பகல் நடைபெறும் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாவில் முடிவுகள் அறிவிக்கப்பட்டு பரிசு வழங்கப்பெறும்.
17. போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்குப் பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.
18. போட்டியில் பங்கேற்கும் மாணவ / மாணவியர்களுக்கு மதிய உணவு, குடிநீர், தேநீர் வழங்கப்பெறும்.

ஒம்/– ந. அருள்
தமிழ் வளர்ச்சி இயக்குநர்

//நேர்ப்படி அனுப்பப்பெறுகிறது//

க. பவானி
தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்
சென்னை மாவட்டம்